முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,பொள்ளாச்சி

நாள்: 16.10.2025,அ.வ.எண்.63/2023 வா.சா.2. பூவாத்தாள், க/பெ. காளியப்பன்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) நான் வசித்து வரும் முகவரியில் எவ்வளவு நாட்களாக இருந்து வருகிறேன் என்றால் சுமார் 50 வருடங்களுக்கு மேல் இருப்பேன். நான் யாருக்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் ஆனந்தஜோதிக்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். ஆனந்தஜோதி என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் வாரிசு சான்றிதழ் வேண்டி தாக்கல் செய்துள்ளார். யாருடைய வாரிசு சான்றிதழ் கேட்டு தாக்கல் செய்துள்ளார். காளியப்ப கவுண்டரின் வாரிசு சான்றிதழ் கேட்டு தாக்கல் செய்துள்ளார். காளியப்ப கவுண்டர் எனக்கு என்ன உறவுமுறை என்றால் கொழுந்தனார் ஆவார். எனது மாமனாரும், காளியப்ப கவுண்டரின் அப்பாவும் அண்ணன், தம்பி என்றால் சரிதான். அவர்கள் இருவரும் அண்ணன், தம்பி என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2) காளியப்ப கவுண்டர் பூமிக்கு பக்கத்தில் எனக்கும் பூமி உள்ளது என்றால் ஒரே பொழி தான். காளியப்ப கவுண்டர் இறந்த விவரம் எனக்கு நேரடியாக தெரியும் என்றால் தெரியும். அவர் இறக்கும் போது அவருக்கு என்ன வயது இருக்கும் என்றால் 55 இருக்கும். காளியப்ப கவுண்டர் இறந்ததற்கு பின்னிட்டு அவரது மனைவி ரத்தினம்மாள் தான் விவசாயம் செய்துவந்தார் என்றால் சரிதான். காளியப்ப கவுண்டருக்கு கிருஷ்ணசாமி என்ற சகோதரர் இருந்தார் என்றால் சரிதான். அவர் ரத்தினம்மாளுக்கு உதவியாக இருந்து வந்தார் என்றால் சரிதான். காளியப்ப கவுண்டர் இறந்ததற்கு பின்னிட்டு ரத்தினம்மாளும், தெய்வஜோதியும் பூமிகளை 3 ம் நபருக்கு கிரயம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. தெய்வஜோதிக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் அது எனக்கு

ஒப்பம்/–(R. சுஜாதா)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

தெரியாது காலம் கடந்துவிட்டது.

3) தெய்வஜோதிக்கு திருமணம் நடைபெற்றதற்கு பின்பு அவரது கணவர் காளியப்பன் தான் ரத்தினம்மாளுக்கு உதவியாக இருந்து பூமிகளை விவசாயம் செய்து வருகிறார் என்றால் சரிதான். அவ்வாறு விவசாயம் செய்து வந்த சமயத்தில் எங்களுக்கும் தெய்வஜோதி தரப்பினருக்கும் வண்டித்தடம் சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். புகார் கொடுத்து நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றது என்றால் புகார் எதுவும் கொடுக்கவில்லை. வண்டித்தட பிரச்சனையை மனதில் வைத்துக்கொண்டு தான் 1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இறந்து போன காளியப்ப கவுண்டருக்கு 1, 2 பிரதிவாதிகள் தான் வாரிசு என்றும் வாதி வாரிசு இல்லை என்றால் சரியல்ல. விவரங்கள் எதுவும் தெரியாமல் நான் தவறுதலாக முதல் விசாரணை சாட்சியம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

<u>**3,4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை,**</u>

1) 1, 2 பிரதிவாதிகள் இறந்து போன காளியப்ப கவுண்டருக்கு வாரிசு சான்றிதழ் வேண்டி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து வாரிசு சான்றிதழ் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த வாரிசு சான்றிதழ் அடிப்படையில் சொத்து பெயர் மாற்றம் செய்து 1, 2 பிரதிவாதிகள் அனுபவித்து வரும் விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதிக்கு நான் உறவினர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/-(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.